IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

OS.No. 241/2024

dated : 05.08.2025

P.W.1

Name மங்களசுந்தரி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

சம்பவ இடத்தின் அருகில் எங்களுக்கு சொந்தமாக நிலம் ஏதும் இல்லை. மற்றொருவரிடம் வேலை பார்ப்பதற்கு என் கணவர் அங்கே சென்றார். நான் அந்த பகுதிக்கு பலமுறை சென்றுள்ளேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள மோட்டார் பம்ப் செட் மற்றும் அதில் உள்ள மின் கம்பங்கள் அந்த இடத்திற்குரியதுதான் அது பி.சா.ஆ.1 வரிசையாகும் (4 எண்ணிக்கைகள்) (ஆட்சேபனையுடன்) அந்த மின் கம்பத்தில் மின் கம்பத்தை நிறுத்துவதற்காக இணைக்கப்பட்டுள்ள Stay கம்பியின் மற்றொரு முனை அந்த கம்பத்தின் முனையில் அமைந்துள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் மின் பாதை கிழ மேலாக அமைந்துள்ளது தென்வடலாக அமைந்துள்ளதா என்று எனக்கு ஞாபகமில்லை. சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திற்கு வரக்கூடிய மின் இணைப்பு மேற்கிலிருந்து கிழக்கேயுள்ள சேர்வைவழங்கும் கம்பத்திற்கு வந்து வடக்கே செல்லும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும்

புகைப்படத்தில் Stay கம்பி இணைக்கப்பட்டுள்ள இடத்தில் மின்கடத்தா பொருள் இணைக்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மின் கம்பத்தில் மின் இணைப்பு வழங்கும் கம்பிகள் பொருத்தப்பட்ட இடத்திற்கும் Stay கம்பி பொருத்தப்பட்ட இடத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் இந்த இடத்தை பார்க்கவில்லை. என் கணவர் மீது மின் கம்பி பட்டு ஏற்பட்ட மின் விபத்து மின் கம்பத்திலிருந்து எவ்வாறு மின் கசிந்தது என்று எனக்கு தெரியாது. மின் கம்பத்தில் மின் இணைப்பு வழங்கும் வயருக்கும் Stay கம்பி வயருக்கும் இடையே தொடர்பற்ற நிலையை மறைத்து இரண்டையும் ஒன்றாக கட்டி வைத்ததால்தான் Stay கம்பியில் மின் கசிவு ஏற்பட்டிருக்கலாம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மின் கம்பத்திலிருந்து மோட்டார் அறைக்கு செல்லும் மின் இணைப்பு பகுதிக்கும் பிரதிவாதியான மின்வாரியத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அதிலுள்ள குறைபாடு பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணை வாக்குமூலத்தை படித்துப் பார்த்தேன் அதில் பத்தி 4 ல் Stay கம்பி அருகில் கடந்து செல்லும்போது Stay கம்பியானது பொன்னுத்துரை மீது மின்சாரம் தாக்கி Stay கம்பி மீது விழுந்து பொன்னுத்துரை இறந்துவிட்டார் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவலறிக்கைக்கான புகாரில் பொன்னுத்துரை Stay கம்பியை பிடித்ததால் மின்சாரம் தாக்கி இறந்தார் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த விபத்து ஏற்பட்ட நாள் மழைக்காலம் என்றால் சரிதான். முதல் நாள் மழை பெய்திருந்தது. இடி, மின்னல் காரணமாக மின்

விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மோட்டார் அறைக்கு செல்லும் மின் கம்பியை Stay கம்பியுடன் சேர்த்து கட்டிய நுகர்வோரின் குறைபாடுதான் மின் விபத்திற்கு காரணம் என்றால் அதுபற்றி தெரியாது. என் கணவர் மாதம் ரூ. 20000/- ஈட்டினார் என்பதற்கு ஆவணம் ஏதும் இல்லை. பிரதிவாதி நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவல் அல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.08.05 18:25:46 +0530